# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

# O.S.18/2023

# CNR.No.TNCB19000

Date:18.03.2025 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | தங்கராஜ் | **வயது** | 40 |
| த/பெ | கரியப்பன் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | மேட்டுப்பாளைய ம் | **மாவட்டம்** | மேட்டுப்பாளையம் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 18th March 2025

வா..சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்து சின்னக்கள்ளிப்பட்டி கிராமம் 234 /2 ல் உள்ளது என்றால் சரிதான். வருவாய் ஆவணங்களின்படி ரங்கசாமி மற்றும் மாரிமுத்து ஆகியோர்களின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 2022 க்கு பிறகு அவர்களது பெயரில் உள்ளது. 2022 க்கு முன்பு அவரது தகப்பனார் பெயரில் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2022 க்கு முன்பே பட்டா எண்.6451 தனிப்பட்டாவாகி ராமசாமி பெயரில் இருந்து வந்த சொத்துக்கள் ரங்கசாமி மற்றும் மாரிமுத்து ஆகியோர்களின் பெயரில் மாற்றப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

தாவா தாக்கல் செய்யும்போது தாவா சொத்துக்கள் யாருடைய பெயரில் இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ராமசாமி என்பவர் பெயரில் இருந்தது. சாட்சி மீண்டும் 2022 ம் வருடமே தெரிந்ததாக சொல்கிறார். தாவா தாக்கல் செய்த சமயத்தில் தாவா சொத்துக்கள் ராமசாமியின் பெயரில் இருந்தது என்றால் சரிதான். ராமசாமி பெயரில் தான் வருவாய் ஆவணங்கள் இருந்தது குறித்து பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ராமசாமி பெயரில் இருந்தது தெரிந்தே வழக்கு தாக்கல் செய்யும்போது சொல்லவில்லை என்றால் சரிதான். 2022 ல் தாவா தாக்கல் செய்வதற்கு முன்பே தாவா சொத்துக்கள்

ராமசாமியின் பெயரில் இருந்த விபரம் தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு தாவா சொத்துக்கள் ராமசாமி பெயரில் இருந்ததை நீக்க எந்த நடவடிக்கையும் தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு நான் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். ராமசாமி என்பவர் ரங்கசாமி என்பவரிடமிருந்து வாங்கிய சொத்து என்பதால் நான் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

1997 ம் வருடத்தில் இருந்தே ராமசாமியின் பெயரில்தான் தொடர்ந்து இருந்து வந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கெம்பம்மாளோ ராஜம்மாளோ தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்தது குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்திருக்கிறேன். கெம்பம்மாள் 2015 வருடமும் ராஜம்மாள் 1996 ம் வருடமும் இறந்தார்கள். இவர்கள் இருவரும் இறப்பதற்கு முன்பு ஒன்னியம்மாள் மற்றும் அவரது கணவரும் இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். ஒன்னியம்மாலும் கஜ்ஜபப்பன் இருவரும் இருந்தபோது ரங்கசாமி உயிருடன் இருந்தார் என்றால் சரிதான்.

ஒன்னியம்மாளும் கஜ்ஜபப்பனும் உயிருடன் இருக்கும்போது ரங்கசாமி தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்றால் சரிதான். ஆனால் நாங்களும் விவசாயம் செய்தோம். ஒன்னியம்மாள் 1983 ம் ஆண்டில் இறந்தார். அப்போது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். ஒன்னியம்மாளும் கஜ்ஜபப்பனும் இருக்கும்போது ரங்கசாமி தான் சுவாதீனத்தில் இருந்து விவசாயம் செய்து வந்தார் என்றும் அப்போது நான் பிறக்கவில்லை என்பதால் நான் விவசாயம் செய்து வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1997 ம் ஆண்டு ரங்கசாமி தாவா சொத்துக்களை ராமசாமிக்கு விற்று விட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

1997 க்கு முன்பு கரடு முரடாக இருந்த தாவா சொத்தை ராமசாமி சமன் செய்ய நிறை முதலீடு செய்து விவசாயம் செய்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான்குழந்தையாக இருக்கும்போதே ரங்கசாமி என்பவர் ராமசாமிக்கு விற்றுவிட்டார் என்றும் அதன் பிறகு தொடர்ந்து ராமசாமி சுவாதீனத்தில் இருந்து வந்தார்என்று சொன்னால் சரியல்ல. சின்னக்கள்ளிப்பட்டி என்பது சிறிய கிராமம் அதில் யார் விவசாயம் செய்து வந்தாலும் தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் செக்குபந்தி தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் நான்குபுற எல்லைகள் பற்றி குறிப்பிட்டு பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியிருக்கிறேன். நான் செக்குபந்தி பற்றி

எதுவும் சொல்லவில்லை தாவா சொத்திற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லாததால்தான் செக்குபந்தி பற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பக்கத்தில் உள்ள உரிமையாளர்களை விசாரித்தால் 1997 க்கு முன்பு தாவா சொத்தில் யார் விவசாயம் செய்து வந்தார்கள் என்ற விபரம் தெரிய வரும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2022 ம் ஆண்டில்தான் கிரைய பத்திரம் பற்றி தெரிந்து அதை ரத்து செய்ய எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். ரங்கசாமி 2020 ம் ஆண்டு இறந்தார். ஒன்னியம்மாள் இறந்தபிறகு கெம்பம்மாளோ ராஜம்மாளும் தாவா சொத்தில் உரிமை கேட்டு எந்த நடவடிக்கையும் ரங்கசாமி மீது எடுக்கவில்லை என்றால் சரிதான். கெம்பம்மாளும் ராஜம்மாளும் இறந்த பின்னிட்டு அவர்களுடைய வாரிசுகள் ரங்கசாமி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். ரங்கசாமி இறக்கும் வரை நாங்கள் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து ரங்கசாமிக்கு பாத்தியப்பட்டு ராமசாமிக்கு விற்பனை செய்த விபரம் நன்கு தெரியும் என்றும் அதனால்தான் ரங்கசாமி உயிருடன் இருக்கும்வரை நாங்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் ரங்கசாமி ராமசாமிக்கு விற்பனை செய்த விபரம் எனக்கு தெரியாது. அதனால் நடவடிக்கை எடுக்கவில்லை.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார். |

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.